உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, ஆனி } மலர் ௩

க.	கருதலளவைப்பகுதி திரு. த. இராமநாத பிள்ளை அவர்கள்	81
உ.	இந்தியாவும் சீனவும் திரு. T. S. நடராசன் அவர்கள்	89
௩.	'பரணர்' மறுப்பின் ஆராய்ச்சி திரு. வித்துவான். ஐ. நடேசப்பிள்ளை அவர்கள்	93
ச.	பண்டைத் தமிழர் மணமுறை திரு. வித்துவான். மா. இராசமாணிக்கம் அவர்கள்	99
ரு.	பாண்டியர் வரலாறு திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள்	106
சா.	திருவாதவூரர் திருவாய்மொழி திரு. வித்துவான். வீ. குமாரசாமிஐயர் அவர்கள்	114
எ.	புத்தக மதிப்புரை	119
அ.	நன்கொடை பொழிற்றொண்டர்.	120

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰உ	தாது, ஆனி	மலர் ௩

உ

கருதலளவைப் பகுதி

திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள், சாவகச்சேரி, இலங்கை

4-ம் அதிகாரம்

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 2. பக்கம் 60.)

25. அப்பியாசங்கள்.

பின் வருந்துறைகளின் உண்மைப் போலிகளை ஆராய்க.

முதலாம் அப்பியாசப்.

1. ஒவ்வொரு நூலும் குறைவுடையது. ஒவ்வொரு நூலும் மக்களின் ஆக்கப்பொருள். ஆகையால் மக்களின் ஆக்கப் பொருள்கள் எல்லாம் குறைவுடையன.

2. மனோபாவனையிற் குறைந்தோர் புலவராகார். மனோ பாவனையிற் குறைந்த சிலர் அளவைநூல் வல்லோர். ஆகையால் புலமையிற் சிறந்த சிலர் அளவைநூல் வல்லோரல்லர்.

3. சில கணிதநூலாசிரியர் அளவை நூலாசிரியர். அளவை நூலாசிரியர் ஒவ்வொருவரும் யவனருடைய அளவைமுறையிற் பழகினவராயிருப்பர். ஆகையாற் சில கணித நூலாசிரியர் யவன அளவைமுறையிற் பழகினவரே.

4. கொடுங்கோல் மன்னர் எல்லாரையும் கொலை செய்தல் தகுதி. சிலப்பதிகாரத்துப் பாண்டியன் கொடுங்கோலனல்லன். ஆகையால் அவனைக் கொலை செய்தல் கூடாது.

5. சொக்கிறெற்றிஸ் அடக்கமுடையவர்; ஏனெனில் எல்லா ஞானிகளும் அடக்கமுடையவர்.

6. அழகின்மை இயற்கையானுயது. இழிவு இயல்பாய் வருவதன்று. ஆகையால் அழகின்மை ஒருவனுக்குஇழிபாகாது.

7. மானி ஆராய்ச்சிநூல்களை நன்கு கல்லான். ஆகையால் நியூற்றன் கெப்பினர் முதலியோர் மானிகளல்ல.

8. மாணிக்கவாசகர் ஒரு சித்திபெற்ற அமைச்சன், அவர் ஒரு தத்துவஞானி. ஆகையால் தத்துவ ஞானிகள் எல்லாம் நல்லமைச்சர் ஆவார்.

9. அறம் பொருள் இன்பத்தைப்பற்றி மொழியும் நூல்கள் எல்லாம் புராணங்கள். திருக்குறள் புராணமன்று. ஆகையால் அது அறம் பொருளின்பத்தைப்பற்றி மொழியும் நூலன்று.

10. வெப்ப மிகுந்த தேசங்களில் மாத்திரம் திராட்சைக் கொடி வளர்கின்றது. உரோமநாடு வெப்பமிகுந்த தேசம். ஆகையால் அங்கே திராட்சைக்கொடியுண்டு.

11. யாது ஒருவனைக் கீழ்மையினின்றும் காப்பாற்றுமோ அது போற்றற்பாலது. செந்தமிழ் இலக்கியம் பகுத்தறிவின் இன்பங்களைக் கூறுவதால் அத்தன்மைத்து. ஆகையால் தமிழ் இலக்கியங்களைப் போற்றுமின்.

12. அதிகப் பொருளைத் தேட விரும்புவோன் கயவன். அதிகப் பொருளைத் தேடுவோன் துன்புறுவன். ஆகையால் கயவர் துன்புறுவர்.

இரண்டாம் அப்பியாசம்.

1. புல்லறிவாண்மை தீமை விளைக்குமாகையால் தருக்க நூலைக் கல்லாமை நன்று.

2. அவன் யுத்தக்களத்தில் வேற்படைக் கஞ்சினனாகையால் கோழையன்.

3. சில மூடருக்கு நல்ல ஞாபகசக்தி உண்டென உளநூலார் கூறுகின்றனர். எனக்கு ஞாபக சக்தியைக் கொடாததற்காகக் கடவுளுக்கு நான் நன்றி செலுத்தவேண்டுமல்லவா?

4. எல்லாக் கணக்காயரும் புலவராவார், ஏனெனில் நக்கீரர் இரண்டுமாயிருந்தவர்.

5. அவன் தான் கொலை செய்தவனாயிருத்தல்வேண்டும், ஏனெனில் அவன் தான் மரணகாலத்தில் உடன் நின்றவன்.

6. அறிவீனர் மாத்திரம் கல்வியை இகழ்பவர். இவர் கல்விப் பயிற்சியைப் புகழ்கிறாராகையால் அறிவிற் சிறந்தோராவர்.

7. யாது வாயிற்காட்சியால் உணரப்படுகிறதோ அது உண்மைப்பொருள். கடவுளது உண்மை வாயிற் காட்சியால் பெறப்படாமையால் கடவுள் இல்லை என்பது நிச்சயம்.

8. மருத்துவனாற் பயனென்கொல்? சென்ற வருடத்து மருந்துசாப்பிட்டவர்கள் எல்லாருந் துஞ்சினாரல்லவா?

9. ஞானிகளல்லாதார் நல்லவரல்லர். நல்லோரல்லாதார் இன்புறார். ஆகையால் ஞானிகளல்லாதார் இன்புறார்.

10. கற்றதனாலாய பயனென்கொல்? ஒவ்வொரு நாளும் கற்றோர் சிலர் களவுக்குத் தண்டிக்கப்படுகின்றனர்.

11. எல்லாருக்கும் பொதுவாயுள்ள ஒரு இயற்கை நிகழ்ச்சியாகலால் சாவு ஒரு தீமையன்று.

12. ஒரு வாயிற் காட்சியின் விடயமே அப்பொருளினது உண்மையை நிரூபிக்கின்றது. எல்லாப் பொருள்களும் வாயிற் காட்சிகளின் சமுதாயமே. சமுதாயமாகவே ஒருபொருள்

விடயமாகின்றது. ஆகையால் ஒருபொருள் உண்மைப் பொருளாதற்கு வாயிற் காட்சியால் அறியப்படவேண்டும்.

26. வழியளவை குற்றமுடையதோ?

ஆங்கில நூலாசிரியர் யே. ஸ். மில் என்பவர் அந்நுவயம் ஒன்றனை ஒன்று புற்றுதல் என்னும் போலியுடைத்தென ஐயுற்றனர். மில்லின் ஆசங்கை வருமாறு:—

ஒரு அந்நுவயம் நிரூபிக்கும் உண்மை பூருவசாதனத்தில் அடங்கியுள்ளதென்றும் அவ்வுண்மையின் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை உத்தர சாதனம் எடுத்துக் காட்டுமென்றும், அங்ஙனம் சிறப்பு நிகழ்ச்சியினது உண்மை பூருவ சாதனத்தால் வலியுறுத்தப்படுமென்றும் அரிஸ்தாதில் அந்நுவயத்தின் இலக்கணத்தை மொழிந்தனர். நன்று. அந்நுவயத்தால் நிரூபிக்கப்படும் உண்மை பூருவ சாதனத்தால் காட்டப்படுமாயின் உத்தர சாதனத்தால் ஒரு பயனுமில்லை.

உ, எல்லாமக்களும் இறக்குந் தன்மையர்.

உ, சொக்கிறெற்றிஸ் ஒரு மனிதன்.

உ, சொக்கிறெற்றிஸ் இறக்குந் தன்மையர்.

பூருவசாதனம் உண்மையெனஅறியப்பட்டதாயின், உத்தர சாதனம் மிகையாகும். உத்தரசாதனம் கூறும் உண்மையை அறிந்த பின்னரே பூருவசாதனம் கூறும் உண்மையை நாட்டலாம். சாத்தியவுண்மையாகிய சொக்கிறெற்றிஸ் இறக்கும் தன்மையர் என்பது சாதனங்களால் பெறப்படவில்லை. பூருவ சாதனமே சாத்தியவுண்மை முழுவதையும் கூறுகின்றது. பூருவ சாதனமும் சாத்தியமும் ஒரு உண்மையைக் கூறுகின்றவையாகையால் ஒன்று ஒன்றனை நிறுத்தமாட்டாது. ஆகலின் அந்நுவயம் மேற்கோட் போலியுடைத்து. மேற்கோளொன்றுமே அந்நுவயத்தை நிரூபிக்கின்றதாகையால், எதுக் கூறுதலான் ஒரு பயனுமில்லை. சொக்கிறெற்றிஸ் இறக்குந் தன்மையவர் என அறிந்த பின்னரே எல்லா மனிதரும் இறக்குந் தன்மையர் என மொழியலாம். நிரூபிக்கவேண்டியதை மேற்கோளாக

மொழிந்தால், நிரூபித்தவென ஒரு முறையில்லை என்பது மலை யிலக்காகும்.

எல்லாமக்களும் இறக்குந்தன்மையர் என்பது ஒருபொதுத் தாட்டாந்தம். இதனுண்மையை அறிதற்கு சொக்கிறெற்றி சும் பிறரும் இறக்குந் தன்மையர் என அறிந்திருக்கவேண்டும். செக்கிறெற்றிஸ் இறக்குந் தன்மையர் என்பது எல்லாமக்களும் இறக்குந் தன்மையர் என்னும் பொதுத் தாட்டாந்தத்தில் அடங்கியிருக்கும் ஒரு சிறப்புத் தாட்டாந்தம். இச்சிறப்பின் உண்மை அறிந்த பின்னரே பொதுவின் உண்மை அறியப்பட்ட தாகலின், இச்சிறப்புண்மையை பொதுத் தாட்டாந்தவுண் மையை ஆதாரமாகக்கொண்டு வலியுறுத்தல் போலியாகும்.

பொதுத் தாட்டாந்தம் பல காட்சிகளின் ஒரு கூட்டுண் மையை மொழிகின்றது. ஒவ்வொரு காட்சியும் ஒரு சிறப் புண்மையாகுமாதலின் சிறப்புத் தாட்டாந்தங்கள் மொழியும் காட்சிகளைத் தொகுத்து ஒரு கூட்டுண்மையாக மொழிதலே பொதுத் தாட்டாந்தம்.

கருதல் என்பது ஒரு சிறப்புத் தாட்டாந்தத்திலிருந்து வேறோர் சிறப்புத்தாட்டாந்தத்தைத் துணிதலே. கூட்டுண்மை களைமொழியும் பொதுத் தாட்டாந்தமெல்லாம் பொதுத் தாட் டாந்தமல்ல. அவை சிறப்பே. எல்லா மக்களையும் எண்ண வியலாதாகலான் சொக்கிறெற்றிஸ் என்பவருக்கு முன்னிருந்த பலர் இறந்தாரென்பது உண்மை ஆதலின் சொக்கிறெற்றிஸ் என்பவரும் இறப்பர் எனத் துணிகிறோம். சிறப்பிலிருந்தே சிறப்பைத் துணிகிறோம்.

உதாரண முகத்தான் காட்டுதும். தீயைத் தீண்டிய குழந்தை தன் விரலைத் திரும்பவும் நெருப்பில்வையாது விடுதல் காண்கிறோம். குழந்தை யாண்டுத்தீ ஆண்டுச்சூடு என்னும் மேற்கோளை அறிந்திலது.

ஞாபகசக்தி யுடையதாகையால் குழந்தை பொதுவுண் மையை அறிந்திலதாயினும்; இத்தீசுட்டது, ஆகையால் இத்தீ சுடும் என ஒரு சிறப்புத் தாட்டாந்தத்திலிருந்தே வேறோர்

சிறப்புத் தாட்டாந்தத்தைத் துணிகின்றது. மெழுகுதிரிச் சுவாலையும் நெருப்பாகையால் அதையும் தீண்டாது. எனது பிள்ளையும் இதுபோன்ற பிணியால் வருந்த, இம்மருந்தைக் கொடுத்து நோயை நீக்கினேன், ஆகையால் இம்மருந்தை இக் குழவிக்கும் கொடு என அயலாள் சொல்லுவாள். இங்ஙனம் சிறப்பிருந்து சிறப்பைத் துணிதலே கருதலென மில் தம் மதம் நாட்டினார்.

மில் என்பவருடைய மதத்தைச் சுருக்கிச் சொல்லுவாம்.

(அ) சிறப்புத் தாட்டாந்தத்திலிருந்து பிறிதோர் சிறப்புத்தாட்டாந்தத்தைத் துணிதலே கருதல்.

(ஆ) பொதுத் தாட்டாந்தமென்பது சிறப்புத் தாட்டாந்தங்களின் தொகுதி.

(இ) சாத்தியத்தின் உண்மை பூர்வ சாதனத்தில் அடங்கி இருக்கும்.

(ஈ) உத்தரசாதனம் பூர்வசாதனத்தில் அடங்கியவொரு சிறப்புப் தாட்டாந்தமாகையால் பூர்வ சாதனத்தையே நிரூபித்துக்காட்டவேண்டும். சாத்தியத்தை நிரூபிக்கவேண்டியதில்லை.

அந்நுவயம் மேற் கோட்போலி உடைத் தென்பதன் மறுதலை.

(அ) சிறப்புத் தாட்டாந்தத்திலிருந்து பிறிதோர் சிறப்புத் தாட்டாந்தத்தைக் கருதவியலாது.

(ஆ) சிறப்புத் தாட்டாந்தங்களின் தொகுதியே பொதுத் தாட்டாந்தமென்பது போலி. பொதுத் தாட்டாந்தம் ஒருகூட்டுண்மையை மொழியாமல் ஒரு காரண காரியத் தொடர்பையே மொழிகின்றது.

(இ) உத்தர சாதனம் ஒரு காரண காரியத் தொடர்பின் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை உணர்த்தும்.

(ஈ) ஒருசிறப்பு நிகழ்ச்சியைக்கூறும் சிறப்புத் தாட்டாந்தமொன்றை அச்சிறப்பு நிகழ்ச்சியின்காரண காரியத்தொடர்பைக்

கூறும் பொதுத் தாட்டாந்தத்தோடு ஒருங்கு சிந்தித்து ஒரு பொதுவுண்மையில் மேற்கூறிய சிறப்புண்மை உண்டென்பதைக் காட்டுதலே நிரூபித்தல். சிறப்புண்மை பொது வுண்மையில் ஒடுங்கியிருக்குமென்பது அரிஸ்தாதிலின் உரையால் அறியக் கிடக்கின்றது.

இரு சிறப்புத் தாட்டாந்தங்கள் ஒப்பாயின் ஒன்று ஒன்றி லிருந்து கருதப்படும். ஒப்பு ஒரு அந்நுவயக் காட்சியே. இத்தீ சுடுகின்றது ஆகலின் மெழுகுதிரித்தீ சுடுமென்பது ஒப்பு. ஈண்டு ஒருசிறப்புத் தாட்டாந்தத்திலிருந்து வேறோர் சிறப்புத் தாட்டாந்தத்தைத் துணிகிறேமெனச் சொல்ல வியலாது. சிந்தனை சிறப்பிலிருந்து சிறப்பிற்குச்செல்லவில்லை; பொதுத்தாட் டாந்த மூலமாகவே ஒருசிறப்பிலிருந்து வேறோர் சிறப்புத் தாட் டாந்தத்தைத் துணிகிறேம்.

ஒளி வீசுகின்றதும் அசைகின்றதும் பொன்னிறமாகவிருப் பதும் எனப் பல பண்புகளை உடையது எரியெனக் குழந்தை அறியும். மெழுகு திரிச்சுவாலை என்னுமித்தீ எரிகின்றது, பொன்னிறமானது, அசைகின்றது, ஒளிவீசுகின்றதென அறிந்த பின் இது தீயெனக் கருதுகின்றது. யாதி யாது எரிகின்றது அசைகின்றது ஒளி வீசுகின்றது, பொன்னிறமாயிருக்கின்றது அதுவது தீயென ஒரு பொதுத் தாட்டாந்த உணர்ச்சி குழந் தைக் குண்டு. குழந்தை அதைத் தாட்டாந்தமாக மொழிய மாட்டாதாயினும் குழந்தையின் மனத்தில் அப்பொதுக் காட்சி யுண்டு. பொது மூலமாகவே சிறப்புண்மைகளைக் கருதுகிறேம் என்பதைக் காட்டினும்.

இனிப்பொதுத் தாட்டாந்தம் சிறப்புத் தாட்டாந் தங்களின் தொகுதியன்றென்பதையும் பொதுத் தாட்டாந்தம் நீக்கமின்றி நிற்கும் ஓர் காரண காரியத் தொடர்பை உணர்த்துகின்றதென் பதையும் காட்டுவாம். ஒரு கூட்டத்தினர் ஒவ்வொருவரின் சிறப்பியல்பை அறிந்தாலும் அக் குழுவினது பொது வியல்பை மொழியவியலாது. கூட்டுண்மை என்னும் தொகுதியுண்மை வேறு, பொதுவுண்மை வேறு. எ யாண்டும் வி என்புழி ஒருகூட டுண்மையை இப்பொதுத் தாட்டாந்தம் உணர்த்தாது. எகரத்

திற்கும் விகாத்திற்கும் காரண காரியத் தொடர்பு உண்டென்பதே பொதுவுண்மை. நினைவுலகத் துண்மைகளாகிய வடிவக் கணிதப் பிரமாணங்களைப் பொதுத் தாட்டாந்தமாக மொழிகின்றோம். எல்லாமுக்கோணங்களும் 180° பாகையுடையன என்பது பொதுத் தாட்டாந்தம். இவ்வுண்மை சிறப்புத் தாட்டாந்தங்களைக் கூட்டிப்பெற்ற கூட்டுண்மையன்று. அ இ உ என்னும் முக்கோணத்தின் கோணங்கள் 180° பாகை, ப ம ய என்னும் முக்கோணத்தின் கோணங்கள் 180° பாகை, ய ர ல என்னும் முக்கோணத்தின் கோணங்கள் 180° பாகை எனப்பல காட்சிகளைக்காட்டி முக்கோணத்தின் கோணங்கள் 180° பாகைக்குச் சமன் என ஒரு பொதுத் தாட்டாந்தமாக மொழிய வியலாது. அங்ஙனம் காட்டியே பெற்றதெனின் இனித் தோன்றும் முக்கோணம் 180° பாகையுடையவையாகத்தான் இருக்குமென வற்புறுத்த வியலாது. அன்றியும் உலகத்திலுள்ள முக்கோணங்களை எல்லாம் யாவர் அளந்து இக்கூட்டுண்மையைப் பெற்றவர்? இஃதொருபுறமாக கோணங்களை அளக்க வியலாது. என்னை! கோணங்கள் கோடுகளால் வரையறுக்கப் படுபவை. கோடுகள் அகலமில்லாத பொருட்கள். எமது நிலவுலகக்கோடுகள் அகல முள்ளவையாகையால், எமது அளவை பிழையாகும். முக்கோணங்களை நுட்பமாக அளக்க முடியாது. முக்கோணத்தின் வரை விலக்கணத்தைத் தேர்ந்து காரணனுமான முறையாகவே முக்கோணம்180° பாகையுடையதென நிரூபிக்கிறோம். வாயிற்காட்சியை ஆதாரமாகவுடைய காரியகாரண முறையால் முக்கோணம் 180 பாகையுடையதாக வேண்டுமென வற்புறுத்த வியலாது. இவ்வாறு பொதுத் தாட்டாந்தங்கள் நீக்கமின்றி நிற்கும் காரண காரியத் தொடர்பையே மொழியும். 180 பாகையுடையவை முக்கோணங்களென அறிந்தோமாயின், இது முக்கோணம், ஆதலின் இது 180° பாகையுடையதெனத் துணிதலே கருதல். ஈண்டுக் கூட்டுண்மையினின்று ஒரு சிறப்புண்மை துணியப்பட்டதன்று.

மக்கள் இறக்குந் தன்மையர் என்பது யாக்கை நிலையாமை என்னும் ஒரு பொதுவுண்மையை உணர்த்திற்றெனுழிய ஒரு

கூட்டுண்மையை உரைக்கவில்லை. இப்பொது வுண்மையை மேற்கோளாக எடுத்துக்காட்டி: சொக்கிறேற்றீஸ் ஏனைய மக்கள் போல ஞாபகசக்தி முதலிய பண்புகளையுடைய மனிதனே என ஒரு ஏதுவை மொழிந்தால், சொக்கிறேற்றீஸ் இறக்குந்தன்மையர் என்பது புலப்படும். பொதுவுண்மை ஒன்றில் சிறப்புண்மை ஒன்றைக் காணுதலே கருதல். பொதுவுண்மையை மொழியும் பூர்வ சாதனத்தையும் சிறப்புண்மையை மொழியும் உத்தர சாதனத்தையும் ஒரு உண்மையாகக் காட்டலே நிரூபித்தல். பூருவ சாதனமாகிய மேற்கோளால் ஒரு பிரதிக்ஞையை நிரூபிக்க வியலாது. ஏதுவைக் கூறும் உத்தரசாதனமும் அவசியம் வேண்டப்படும். உத்தர சாதனத்தையும் பூருவ சாதனத்தையும் ஒருங்கு சிந்திக்கச் சாத்தியம் தோற்றும். இது தன் பொருட்டநுமானம். ஆசிரியருக்கு அறிவெல்லாம் வகுத்தலறிவாகலான் பிறர் பொருட்டு அநுமிக்கும்போது அந்நுவயம் மேற்கோட்போலி உடையது போலத் தோற்றும். மாணவனுக்கு அறிவு புணர்த்தலறிவாகலான் வழியளவையில் போலியில்லை.

(தொடரும்)

இந்தியாவும் சீனுவும்

T. S. நடராசன், வாணுதுறை, கும்பகோணம்.

[சீனப்பேராசிரியர் டான்-யுன்-ஷன் என்பார் சாந்திநிகேதனத்தில் நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு.]

(முற்றொடர்ச்சி துணர் 12, மலர் 2, பக்கம் 80)

இவ்வாருக, நமது நாடுகளின் நாகரிகங்களிடையேயுள்ள நெருங்கிய பழைய உறவைப்பற்றிய சில உண்மைச் செய்திகளை யான் கூறினேன். ஆனல், சில நூற்ருண்டுகளாக அந்நெருங்கிய உறவு எக்காரணத்தாலோ தளர்வுற்றுப் போனதுமன்றி மனித வாழ்க்கையின் மாறுபாடுகளாலும் காலச் சக்கரத்தின் சுழற்சி

யினாலும் மறைந்தும் போய்விட்டதானது மிகவும் வருந்தத் தக்கதாகும். மேனாட்டு அறிவு நூற் (Science) பயிற்சியின் பயனாக ஏற்பட்ட மாறுதல்களும் உலகாயத மதமும் (Materialism) மிக்க வலிமை எய்தினவாய் மனித வாழ்க்கையாகிய கடலில் கைத்தொழிற் புரட்சி (Industrial Revolution) எனப் படும் கொந்தளிக்கும் அலையை உண்டு பண்ணின. ஐரோப்பிய நாகரிக வரலாறு மிகச் சுருங்கியதாதலின், அவர்களுடைய சமய மும் அறவொழுக்கக் கொள்கைகளும் கொந்தளிக்கும் இந்த அலையை அமைதிப்படுத்தற்குவேண்டிய முதிர்ச்சியை இன்னும் அடையவில்லை. மேனாட்டார் உற்பத்தி செய்யும் பொருள் களெல்லாம் அழிவை விளைக்கும் கருவிகளாக மாறியுள்ளமை யால், அந்தோ! இனி எல்லோருக்கும் தீமையே விளையும். அவர்களுடைய பேராசையும் போர்விருப்பமும் பாவத்திற்கும் கொலைக்கும் ஏதுவான படைகளையும் போர்க் கருவிகளையும் கண்டு பிடித்தற்குரிய காரணங்களாகின்றன; அக்கருவிகள் அஞ் சத் தக்க போர்களையும் துன்பங்களையும் விளைக்கின்றன. ஒவ் வொரு நாடும் போர் வெறி கொண்டுள்ளது; ஒவ்வொரு செய்தி யும் பிழைபாடுடையதாயிருக்கின்றது; ஒவ்வொரு இடமும் நிம் மதியின்றி இருக்கின்றது. அண்மையில் நடைபெற்ற உலகப் பெரும்போர் உலகாயதமதத்தின் முதிர்ச்சியாலேற்பட்ட முதல் விளைவாகும். மேனாடு வருந்துவதன்றிக் கீழ்நாடும் துன்புறு கின்றது. கீழ்நாடுகளிலேயும் மிகப் பழைய நாகரிகம் வாய்ந்த நம் நாடுகளே மிகுதியும் துன்புறுகின்றன. நாகரிகம் மிகுதி யாக மிகுதியாக பகைமைக் குணம் வளர்கின்றது. நமது நாக ரிகங்கள் இப்போது பிழைபட உணரப்பட்டுள்ளன; நம் நாடு களின் முறைகள் முறிந்து போயின; நமது பொது வாழ்க்கை கீழ் நிலையை யடைந்துள்ளது; நம் மக்கள் வெறுத்து ஒதுக்கப் பட்டுள்ளனர். ஆகவே, நாம் உலகாயத மதத்தினரோடு உழலு வதிலும் நம் நாடுகளின் பொதுவாழ்வு பற்றிய விவாதங்களிலும் ஈடுபட்டுள்ளோமாதலின், நமது பழைய நாகரிக உறவைக் கவனித்தற்கு நேரமில்லை.

நமது தொடர்பு நடுவில் சிலகாலம் நீங்கியிருந்த போதிலும் ஒருவர் மற்றவரிடம் கொண்டுள்ள அன்பும் அனுதாபமும் எக்காலத்திலும் மாறுபட்டதில்லை. சமயம் நேர்ந்துழி நம் பழைய உறவைப் புதுப்பித்துக் கொள்வோமாக! நல்வினையின் பயனைச் சென்ற 1924-ஆம் ஆண்டில் கவியரசராகிய குருதேவ இரவீந்திர நாததாகூர் பேராசிரியர்களாகிய க்ஷிதிமோகன் சேன், நந்தலால் போஸ், காளிதாஸ நாக் ஆகியவர்களோடு சீனவுக்கு எழுந்தருளினர். இவ் வருகை நம் பழைய நட்பைப் புதுப்பிப்பதன் முதல் அறிகுறியாகும். சீனர்களாகிய எங்களிடையே கவியரசர் உண்டாக்கிய எண்ணமானது நமது முன்னோர்களாகிய பெரியோர்கள் உண்டாக்கியவையினும் சிறப்புடையதாகும். கவிதாகூரையும் காந்தியடிகளையும் இந்தியாவின் தற்காலப் புத்தர்களென்றே சீனர்கள் கருதுகின்றனர். குருதேவருடைய ஆங்கில நூல்களிற் பெரும்பாலன சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன; 'திரியும் பறவைகள்' (Stray Birds), 'பிறைச் சந்திரன்' (CrescentMoon) ஆகிய பாட்டுக்கள் சீனயாப்பிலேயே ஒரு புதிய இனத்தை உண்டு பண்ணியுள்ளன. நமது தத்துவ ஞானியாகிய கவிதாகூர் சீனவுக்கு வந்தமையை நினைவு கூர்தற்காகப் 'பிறைச்சந்திரன் கழகம்' எனப்பெயரிய சங்கமொன்றும் 'பிறைச்சந்திரன் பத்திரிகை' என்னும் வெளியீடு ஒன்றும் டாக்டர் ஹூ-ஹி என்பவரால் தொடங்கப் பெற்று அவரது மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன. ஆசிய நாகரிகங்களையும் கலைகளையும் ஒற்றுமைப்படுத்தல், இந்தியர் சீனர்களது நாகரிக உறவைப் புதுப்பித்தல் என்பனவாகிய கவியரசரது கருத்துக்களிலும் நம்பிக்கையிலும் சீனப் பேரறிஞர்கள் மிகுந்த அனுதாப முடையவர்களா யிருக்கிறார்கள். சிறந்த அறிஞர்களாகிய நம் தலைவர்களும் ஒருமித்த கருத்துடையவர்களாய் எண்ணியவற்றை நிறைவேற்றுவதில் மிகுந்த விருப்புடையோராயிருக்கின்றனர்; இந்தியாவுக்கும் சீனவுக்கும் தமது நாகரிக உறவைப் புதுப்பித்துக் கொள்ளுவதான காலம் இப்போது வந்துவிட்டது.

இக்காலத்து உலகம் மிகுந்த குழப்பமுற்று ஒழுங்கற்ற நிலையில் உள்ளது. எவ்வளவுக்கெவ்வளவு நாடுகளுக்குள் இருக்க வேண்டிய அன்பு, அமைதிகளைப் பற்றிப் பேசப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு பொறாமையும் பகைமையும் உண்டாகின் றன. நட்புக்காகப் பாடுபடுவதாக நடித்துக்கொண்டே தமது வாள்களை மிகவும் கூர்மையாக்குகின்றார்கள். போர்க் கருவிகள் வெளிப்படையாகவும் தயாரிக்கப்படுகின்றனவென்னும் செய்தி யும் விரைவில் அழிவை விளைக்கத் தக்க கொடியபடைக்கலங்கள் நாடோறும் கண்டு பிடிக்கப் படுகின்றனவென்னும் செய்தியும் நினைத்தற்கு அச்சமாயிருக்கின்றது. அரசியல் வல்லுநர்களும் அரசியல் வாதிகளும் அவையெல்லாம் இராஜதந்திரவிஷயங்கள் என்கின்றனர்; பொருள் நூல் அறிஞர்களும் அரசிறையதிகாரி களும் அவையெல்லாம் பொருளாதார விஷயமென்கிறார்கள். ஆனல், அவையெல்லாம் உண்மையில் உலக நாகரிக விஷயமே யாகும். நாகரிகத்தின் பேரால் விரைவில் ஒரு வழி தேடா விடில் உலகத்தில் பரவியுள்ள இந் நோயினையும் எதிர்காலத்தில் அது விளைக்கும் தீங்கையும் தடுப்பது இயலாத தொன்றாம். ஐரோப்பிய அமெரிக்கப் பேரரசுகள் தம்முயற்சி கைகூடாமல் தடுமாற்ற மடைந்துள்ளன; ஆதலின் கீழ் நாட்டார்களாகிய நாம் உலக மக்களைப் பாதுகாத்தலாகிய கடமையை மேற்கொள் ளல் வேண்டும். யான் இவ்வாறு கூறுவது அமெரிக்க ஐரோப் பிய நாடுகளின்மேல் சிறிதாயினும் உள்ள தப்பெண்ணத் தினுலும் வெறுப்பினுலும் அன்று; மேனாட்டு அறிவு நூற்களின் பயன்களாகவுள்ள உதவிகள் தீமை பயவாத வழிகளில் உபயோ கிக்கப்படாமையும் உலகாயதக் கொள்கையுமே இப்போதைய நெருக்கடியான நிலைமைக்கும் உலகத்துக்கே ஏற்பட்டுள்ள ஆபத் துக்கும் ஏதுக்களாகின்றன. ஆதலின், மனிதவாழ்க்கைக்கு நன்மை பயப்பதான ஒருவழி, இந்திய சீன நாகரிகத்திலிருந்து ஆராய்ந்தறியப் படல்வேண்டும். எல்லா மேனாட்டு அறிவுநூல் களையும் எறிந்து விடவேண்டுமென்று யான் சொல்லவில்லை. அறிவு நூற்களின் உதவிகொண்டு உற்பத்தி செய்யும் பொருள் களை, இந்திய சீன நாகரிகங்களின் ஒழுக்கங்களாகிய அன்பு, உப

கார சிந்தை இவைகளை அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்தல் வேண்டும் என்பதும், அதனால் உலக அமைதியையும் நன்மையையும் கொள்கைகளாகவுடைய ஒரு புதிய நாகரிகம் உண்டாகி நிலை பெறும் என்பதுமே யான் கருதுவன வாகும். தமது கலை வளர்ச்சிகளின் பயனாய் விரைவில் உண்டாகக் கூடிய தீமைகளை யறிந்தவர்களான அமெரிக்க ஐரோப்பிய அறிஞர்கள் அத் தீமைகளைத் தடுப்பதற்குரிய வழிகளை நமது நாகரிகங்களி லிருந்து கண்டுபிடித்து வருகிறார்கள். ஆதலின், இந்தியர் சீனர் களாகிய நாம் விழித்தெழுந்து நம் பழைய உறவுகளைப் புதுப்பித் துக்கொள்ள வேண்டுமென்பது சொல்லாமலே யமையும். நமது நாகரிகங்களையும் கலைகளையும் ஒருவர்க்கொருவர் மாற்றிக்கொள் வதனால் அவைகளுக்குப் புத்துயிர் உண்டாகும்; புத்துயிர் பெற்ற நமது நாகரிகமே புதிதான உலக நாகரிகத்தை உண்டாக் கும்; அப் புதிய நாகரிகத்தால் உலகத்தின் துன்பம் நீங்கும். முற்காலத்தில் நம் இருநாடுகளும் உலக வாழ்வை ஒளி பெறச் செய்திருக்கும் போது, பிற்காலத்திலும் அவ்வாறு செய்தல் இயலாத தொன்றா?

(*The Modern Review.*)

'பரணர்' மறுப்பின் ஆராய்ச்சி

வித்துவான், ஐ. நடேச பிள்ளை, அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், பொன்னேரி

சென்னைப் பல்கலைக்கழகத்தார் வெளியிட்ட 'பரணர்' என்னும் நூலைக்குறித்து ஔவையார்குப்பம் 'வித்வான்' சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் 'தமிழ்ப்பொழில்' துணர் 11 மலர் 9, 10இல் எழுதியவற்றைப் படித்தேன். ஆராய்ச்சி யாளர் 'திருத்தமுடையதனையும் திருத்தமில்லாதபாடம் எனத் திரியக்கொண்டு, பொருத்தமில்லாதவுரை எழுதுகின்றார்' [1] என்று எழுதி ஒன்று காட்டியுள்ளார்கள். அஃதாவது:—

1. பக்கம் 355.

1. நற்றிணை 350-ஆம் செய்யுளில், "ஆகில் கலங்கழீஇ யற்றும்" என்றிருப்பதனை "ஆசி லகலந் தழீஇ யற்று" எனத் திருத்திக்கொண்டது பொருந்தாது[1] என்பது. பிள்ளையவர்கள், 'ஆகில் கலங்கழீஇ யற்றும்' என்பதற்கு, 'தீண்டற்காகாத கலத்தைக் கழுவிக்கொள்ளுதல் போல்வதாம்'[2] என்று பொருள் கூறி அதனை வலியுறுத்தற்கு,

' * * *

தொடுகலங் குறுக வாரல்

* * * *

நின்னலத் தகுவியை முயங்கிய மார்பே' (அகம் 196)

என்னும் அடிகளைக் காட்டி, 'இதன்கண், தலைமகன் குறுக வந்த வழி, அவன் தீண்டுதலால் "தோடுகலம்" தோடாக்கலமாய், இப் பாட்டுக் கூறும் "ஆகில் கல"[3]மாம் என்றார்கள்.

'தொடுகலங் குறுக வாரல்'

என்னும் அடியில் தொடுகலம் என்பது தொடேம் என்னும் பொருளதாதலே யன்றி, தொடாக்கலம் என்னும் பொருளதாகுமா? தொடுகலம் என்பதனை வினைத்தொகையாகக் கொள்ளினும், தோடாக்கலம் என்னும் எதிர்மறைப்பொருள் தருதல் யாங்ஙனம்? பிள்ளையவர்கள் கூறிய பொருத்தமான வுரையை அறிஞர் சிறிது நோக்குவாராக.

ஆயின், தலைமகள், தலைமகன் முன்னர்த் தன்செயலைப் பன்மை வினையாற் கூறுவாளோ எனின்,

'எம், முதுமை யெள்ளலஃதமைகும்' (அகம். 6)

என்று பரணர் செய்யுளிலேயே வந்திருத்தல் காண்க.

அன்றியும்,

'எந்நலந் தொலைவ தாயினும், துன்னலம்' (ஐங். 63.)

என்று பிறருங் கூறியிருத்தல் அறிக.

இனி 'ஆகில் கலங்கழீஇ யற்றும்' என்று பதிப்பித்திருப் பதனை, 'ஆசி லகலந் தழீஇ யற்று' என்று திருத்தியது தவறால்

1. பக்கம் 374. 2. பக்கம் 376. 3. பக்கம் 373.

எனின், பதிப்பித்துள்ள பாடத்திற்குப் பொருள் பொருந் தாமையானும், ககர சகரங்களும் ககர தகரங்களும் வேறு பாடறிதற் கியலாதவாறு ஏடுகளில் எழுதப்பட்டிருத்தல் உண்மையானும் அங்ஙனம் ஊகித்துக் கொள்ளப்பட்டதாகும். திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களிடத்தில் இருக்கும் பழைய ஏடுகளில் 'ஆசி லகலம்' என்றே உளது. இதனால் பரணர் நூலாராய்ச்சியாளர் ஊகத்தின் அருமை நன்கு புல னாகும். 'கழிஇ யற்று' என்றிருப்பதுவும் 'தழீஇ யற்று' என்று இருக்கத் தகுவதே.

'பைத லொருகலே' என்பது
'பைத லொருதலே'[1] என்றும்
'தண்டுளிக் கேற்ற' என்பது
'கண்டுழிக் கொற்ற'[2] என்றும்
'கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்' என்பது
'கயிறரி பெருந்திறத் தழுந்துந் துறைவன்'[3] என்றும்

பதிப்பிக்கப் பட்டிருத்தல் காண்க. ('யெருத்திற் கதழுந்' என் பதை, 'பெருந் திறத் தழுந்' என்று கொண்டமையின், சீர்கெடுத லால், 'துந்' என்பது சேர்க்கப்பட்டுளது என அறிக.)

பிள்ளையவர்கள், 'ஏட்டுப் பிரதிகளில் யை என்னும் எழுத் துச் சிலவிடங்களில் யகர ஙகரம் போலத் தோன்றுதல் உண் டாதலின், "மதுகையை" என்பதே மதுகையங் எனக் கருத நின்றதென் றுணர்க'[4] என்றார்கள்.

யை என்னும் எழுத்து, மை, பை என்னும் எழுத்துப் போலத் தோன்றுதல் கூடுமேயன்றி, யங் எனத்தோன்றுதல் கூடுமோ? யை என்பது யங் எனத் தோன்ற வேண்டுமாயின்,

ை என்பது—ய ஆகவும்
ய என்பது ங் ஆகவும்

அன்றோ தோன்றுதல்வேண்டும்? இவ்வாறு தோன்றுதல்

---

1. குறுந்தொகை 13. 2. குறுந்தொகை 382.
3. குறுந்தொகை 117. 4. பக்கம் 375.

உண்டோ? ஊகித்துத் 'திருத்திக் கொள்ளுதல் நம்மனோர்க்கு ஆகாத செயலாயிற்று' என்ற பிள்ளையவர்கள், யங் என்பதனை யை என்று திருத்தியது ஆகிய செயல் போலும். இனி, 'கலங் கழீஇ இயற்றும்' என்று உம்மை பெற்றிருப்பதுவே பொருத்த மான பாடம் என்று பிள்ளையவர்கள் கூறுகிறார்கள். அவ்வாறு யின் உம்மையின் பொருள் யாது? அஃது எவ்வாறு முடி கின்றது?

2. 'பண்டையாசிரியர் ஒருவரால் தொகை நூல்கள் திணை வகுக்கப்பட்டன என்பது யாவரும் அறிந்தது'[1] என்று பிள்ளை யவர்கள் கூறுகின்றார்கள்.

பண்டையாசிரியரொருவர் யாரோ அறிகிலேன். தொகை நூல்களுள் பரிபாடல் பதிற்றுப்பத்து இவ்விரண்டு நூல்களிலும் திணைப்பெயர் குறித்திருத்தலைக் காண்கிலேன். ஐங்குறுநூறு, கலித்தொகை இவ்விரண்டிலும் ஒவ்வொரு திணையைக் குறித்த செய்யுட்கள் ஒவ்வொரு புலவரால் இயற்றப்பட்டனவாகலானும் அவற்றைத் தொகுத்தோரும் வேறு வேறு புலவராகலானும் அவற்றிற்குத் திணை வகுத்தவர் ஒருவராதல் இல்லை. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு இம் மூன்று நூல்களிலும் உள்ள செய்யுட்களுக்கு ஓலையேடுகளில் திணை குறிக்கப்படவில்லை. இவற்றுள் அகநானூற்றுச் செய்யுளைத் தொகுத்த முறைமை 'வியமெல்லாம் விண்டேரியக்கம்' என்று தொடங்குஞ் செய்யுள் முதலியவற்றால் அறியப்படுதலின், பதிப்பாளர் அம்முறைப்படி திணைப் பெயர் குறித்துள்ளார். நற்றிணை குறுந்தொகைகளைப் பதிப்பித்தவர்கள் அந்நூல்களிற் செய்யுட்களின்[2] கீழ்க் குறித் துள்ள துறையையும் செய்யுளில் வருங் கருப்பொருளையுங் கொண்டு திணைப் பெயர் குறித்திருக்கிறார்கள் எனத்தோன்று கின்றது. மேற்குறித்த மூன்று நூல்களையுந் தொகுத்தவர் வெவ்வேறு புலவரல்லரோ? திணைப்பெயரே குறிக்கப்படாத நற்றிணை குறுந்தொகைகளுக்கும் பண்டையாசிரியரொருவர்

---

1. பக்கம் 353
2. செய்யுட்கட்கு மேற்காண்பது பதிப்பாளர் செய்த மாறுபாட்டாலாயது.

திணை வகுத்தார் என்றும், அதனை யாவரும் அறிவர் என்றும் பிள்ளையவர்கள் கூறியதற்கு ஆதாரம் யாதோ?

3. 'பரணர் பாட்டுக்களுள் குறிஞ்சியும் மருதமும் பெரும் பான்மையவாயினும் இவர் கருத்தின்படி அவை நின்றபாட்டினுள் சிறந்து நின்றது கருப்பொருளே என்றல் நிரம்பாது,[1] என்று பிள்ளையவர்கள் கூறியுள்ளார்கள்.

ஈண்டு, 'இவர்' என்றது பரணர் நூலாராய்ச்சி யாளரைக் குறிக்கின்றது. அவர், 'பாட்டுக்களுக்குத் திணை கூறுமிடத்து முதற் பொருளினுங் கருப்பொருளும், கருப்பொருளினும் உரிப்பொருளும் சிறந்த ஏதுக்களாகும். என்பது ஆசிரியர் தொல்காப்பியர் கொள்கையாகும்' என்று எழுதியிருத்தலின், அவர் கருத்து அதுவே யாதல் நன்கறியப்படும். (பிள்ளையவர்களும் அதனையே அவர் கருத்தென்று குறித்துள் ளார்கள்.) அதனால் குறிஞ்சித் திணைச் செய்யுளில் குறிஞ்சிக் குரிய உரிப்பொருளும் மருதத்திணைச் செய்யுளில் மருதத் துக்குரிய உரிப்பொருளும் சிறந்து நிற்றல்வேண்டும்என்பதுவே பரணர் நூலாராய்ச்சியாளரின் கருத்தென்பது அறியப்படு மன்றே? அங்ஙனமாகவும், 'இவர் கருத்தின்படி...................... சிறந்து நின்றது கருப்பொருளே என்றல் நிரம்பாது' என்று பிள்ளையவர்கள் கூறியிருப்பது சரியாமோ?

4. 'குறுந்தொகை, அகநானூறு என்ற இரண்டனையும் பதிப்பித்த ஆசிரியன்மார்களின் முயற்சியருமையினையும் கூறு தொழிந்தார்.'[2] என்பது.

அகநானூற்றைப் பதிப்பித்தோரைக் குறித்து, 'இத் தகைய அருஞ்செயலை யாற்றும் பேரறிஞரை நாம் உளமாரப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம்' என்று பரணர் நூலாராய்ச்சியாளர் எழுதியுள்ளார். குறுந்தொகைப் பதிப்பில் பற்பல செய்யுட்களிற் பிழைகள் பல்கியிருத்தலானும், உரையும் தவறுடையதா யிருத்தலானும் அவர், நற்றிணைப் பதிப்பாளர் போல மதிக்கத் தக்கவராதலின்று. நடு நின்று கூறின் அவர்

1. பக்கம் 353. 2. பக்கம் 354.

குறுந்தொகையைப் பதிப்பித்தற்கும், அதற்கு உரையெழுது தற்கும் ஆற்றலில்லாதவர் என்று கூறுதல் வேண்டும். பரணர் நூலாராய்ச்சியாளர் இவ்வாறு வெளிப்படக் கூற விருப்பின்றி, அவரைப் புகழ்ந்துரையாது விடுத்தார் போலும்.

5. "கருப்பொருளை மட்டுமே நோக்கித் திணை வகுக்கப் பட்ட பாட்டுக்களும் உள்ளன" என்று கூறியவர் அவையித் துணையவென்று துணிந்து, அவற்றால் கோடற்குரிய இம்முடி பினைக் கூறுதொழிந்ததே இந்நிரம்பாமைக் கேதுவாதல் அறிக' என்பது. 'கருப்பொருளை மட்டுமே நோக்கித் திணைவகுக்கப் பட்ட பாட்டுக்களும் உள்ளன' என்று பரணர் நூலாராய்ச்சி யாளர் கூறியது நற்றிணை முதலிய தொகை நூல்களிற்காணும் பொது உண்மை. அந்நூல்களில் எல்லாச் செய்யுட்களையும் நோக்கின் அவ்வாறு திணை வகுக்கப்பட்ட செய்யுட்கள் இத் துணையவென்று அறிதல் கூடும். அங்ஙனம் எண்ணித்தொகை கோடல் தொகை நூற்செய்யுட்கள் எல்லாவற்றையும் ஆராய் வார் தொழிலாதலேயன்றிப் பரணர் செய்யுட்களைமட்டுமே ஆராய்வார் தொழிலன்று. என்பதறிக, நிற்க.

பிள்ளையவர்கள் எழுதியுள்ள கட்டுரையில் சிலவாக்கியங்கள் அமைதியின்றி யிருத்தலின் அவற்றின்பொருள் விளங்குதல் இல்லை. அஃது என் சிற்றறிவிற்கு விளங்கிற்றிலதுபோலும் என்றெண்ணிப் பேறிஞர் சிலரிடமும் வினவினேன். அவர் களும் அவ்வாக்கியங்கள் பொருள் விளங்குமாறு எழுதப்பட வில்லை என்றார்கள். உதாரணமாக— 'அவ்வாறு கூறப்பட்ட திணைகளுள்........ஒரு தலையாய்க் கூறலாகாது.'[1] என்னும் வாக் கியம் பொருளுக்கியைய அமைந்திலாமை நோக்கிக் கொள்க.

1. பக்கம் 353.

பண்டைத் தமிழர் மணமுறை

வித்வான். மா. இராசமாணிக்கம் அவர்கள்,
வண்ணாரப்பேட்டை, சென்னை.

பண்டைத் தமிழர் மணமுறையை ஆராயுமுன், அதனைத் தெள்ளிதிற் கூறும் தொல்காப்பியத்தின் காலத்தை ஆராய்ந்து அறுதியிடல் அவசியமாகும். அதன் காலத்தை அறியின், அதற்குப் பின்னர் வந்த அகநானூறு, குறுந்தொகை முதலிய அகநூல்களில் உள்ள உண்மைகளையும் பிறவற்றையும் நாம் கால வரையறை செய்ய இயலும்.

தொல்காப்பியர் தமிழ் நூற் கடலையும் வடநூற் கடலையும் நிலைகண்டுணர்ந்தவர் என்பது பாயிரம். அஃது 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியத்தின்' எனக் கூறுகின்றது. 'ஐந்திரம்' என்பது 'இந்திரன்' என்பான் செய்த முதல் வடமொழி இலக்கணம் என்பதை வடமொழி வல்லார் ஒப்புகின்றனர். யசுர் வேதத்தில் இஃது உண்மை எனக் கூறப்பட்டுள்ளது. எனவே, வேதகாலத்தில் 'ஐந்திரம்' பிரபல முற்றதாக இருந்திருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறதன்றோ? 'வேதகாலம் ஏறக் குறைய கி. மு. 2000த்திலிருந்து கி.மு. 1700 வரை இருந்திருக்க லாம்' என்பது சரித்திரப் பேராசிரியரான 'டட்' என்பார் கருத்து. எனவே, 'ஐந்திரம்' கி. மு. 2000த்திலிருந்து கி. மு. 1700க்குட்பட்ட காலத்தில் இயற்றப்பட்டுப் பெருஞ் சிறப் பெய்தியிருத்தல் கூடியதே என்பது புலனாகிறது. 'இந்திரனுக் குப் பிறகு 64 இலக்கண வித்வான்கள் தோன்றினார்கள்; அவர் கட்குப் பின்னரே 'பாணினி' என்னும் இலக்கணி தோன்றினன்' என்று, 'மாக்டோனல்' என்னும் பேராசிரியர் 'வடமொழி இலக் கியம்' (பக். 430) என்னும் நூலில் கூறியுள்ளார். எனவே, ஒவ்வோர் இலக்கணிக்கும் சராசரி 30 வயது வீதம் வைத்துக் கொண்டாலும், இந்திரனுக்குப் பின் 1800 ஆண்டுகள் கழிந்தே 'பாணினி' தோன்றிப் பெயர்பெற்ற வடமொழி இலக்கணம் இயற்றியிருத்தல்வேண்டும் அஃதாவது கி. மு. முதல் நூற்

ருண்டில் அல்லது கி. பி. முதல் நூற்ருண்டில் என்பது வெள்ளிடைமலே; அல்லது இந்த 64 இலக்கணிகளுக்கும் ஏறக்குறைய 1000 ஆண்டுகளை ஒதுக்கினும், பாணினிகாலம் டாக்டர் 'பேல்வல்கர்' கூறுகிறபடி, கி. மு. 7ம் நூற்ருண்டுக்கு முற்படாது. எனவே, பாணினிக்கு ஏறக்குறை 1000 ஆண்டுகட்கு முற்பட்டவன் 'இந்திரன்' என்பதும், அந்தக் காலத்திலேயோ அல்லது சற்றுப் பின்னுகவோ தொல்காப்பியர் இருந்திருத்தல்வேண்டும் என்பதும் பெறப்படுகிறது. இஃதன்றி, 'வேத வியாசர் ஆதி வேதங்களை நன்கு அமைப்பதற்கு முன் தொல்காப்பியர் இலக்கணம் செய்தனர்' என்பது நச்சினர்க்கினியர் கூற்று. வேத வியாசர் காலம் பாரதகாலத்துக்குச் சிறிது முற்பட்டது பாரத காலம் கி. மு. 5ம் நூற்ருண்டுக்குச் சிறிது முற்பட்டதென்பது சரித்திர நிபுணர் கொள்கை. எனவே, வேதவியாசர் காலம் கி. மு. 7, 6ம் நூற்ருண்டுகளாக இருத்தல்வேண்டும். எனவே, தொல்காப்பியர் வேத வியாசருக்கு மிக முற்பட்டவர், இந்திரனுக்குச் சமகாலத்தவர் அல்லது சிறிது பிற்பட்டவர் என்பன பெறப்படுகின்றன. எனவே, தொல்காப்பியர் ஏறக்குறைய கி. மு. 16, 17ம் நூற்ருண்டினர் என்பது தெளிவாவதோர் உண்மை. அதனல், தோல்காப்பியம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 3500 ஆண்டுகட்கு முற்பட்டதென்பது பெறப்படும். இது நிற்க.

தொல்காப்பியர் தம் சூத்திரத்தில் 'என்ப', 'என்மனர்,' 'என்றிசினேர்' என்று கூறிச்செல்லும் சொற்களைக் கூர்ந்து நோக்குழி, அவர்க்கு முன் தமிழில் இலக்கணப் புலவர் 'பலர்' இருந்திருத்தல் வேண்டும் என்பதும், அப்புலவர் இலக்கணஞ் செய்தற்குக் கருவியாக இலக்கியங்கள் பல இருந்திருத்தல் வேண்டும் என்பதும் வெள்ளிடைமலை. மிகவும் பண்பட்ட இலக்கண நூலாகிய 'தொல்காப்பியம், செய்தற்கு எத்துணை இலக்கண நூல்களும் எத்துணை இலக்கிய நூல்களும் அவர்க்கு உறுதுணையாக இருந்தன என்பது கூறத்தரமன்று. ஆகவே, மிகப் பண்பட்ட அகப்போருள் இலக்கியங்களும் புறப்போருள் இலக்கியங்களும் அவற்றுக்குரிய இலக்கண நூல்களும் தோல்

காப்பியர் தோற்றத்துக்கு முன்னரே இத் தமிழ் நாட்டில் மல்கி இருந்திருத்தல் வேண்டும் என்பது நூலறிவோடு நுண்ணறிவுடையோர் நன்கறியக்கூடும் அன்றோ?

ஆகவே, தமிழர்க்கே உரிய பழக்க வழக்கங்களைக் கூறும் பண்டை நூல்களை ஐயந்திரிபறக் கற்றும், தம்காலத்தே இருந்த 'ஐந்திரம்' என்ற வடமொழி இலக்கண நூலைக் கற்றும் பழுத்த அறிவோடு தம் காலப்பழக்க வழக்கங்களையும் உளங்கொண்டு தொல்காப்பியர் நூல் செய்தவர் ஆவர் என்று கோடல் மிகையாகாது. தொல்காப்பியர் 'களவு, கற்பு' என இருவகை மணங்களைக் கூறியுள்ளார். களவென்பது ஒருவனும் ஒருத்தியும் முன்னர் அறியாது எதிர்ப்பட்டுக் கொள்ளும் உள்ள நெகிழ்ச்சியும் அதன் வழிப்பட்ட காதல் வாழ்க்கையுமாம். இது தலைவி, தலைவன், பாங்கன், பாங்கி என்னும் நால்வர் வயப்பட்டிருக்குங்கால் 'களவு' எனப்படும். பின்னர், இருமுதுகுரவர் கொடுப்ப ஒருவரை ஒருவர் (தலைவன், தலைவி) கோடல் 'கற்பு' என்பது. இக்கற்பு, பலர் அறிய நடப்பது. பலர் வருதலும், உண்டலும், மணமக்களை அலங்கரித்தலும், மகிழ்ச்சி கொண்டாடலும் போல்வன அக்காலத்தே நிகழ்தல் இயல்பல்லவா? இவற்றையே தொல்காப்பியர் 'கரணம்' என்றார். (பஞ்சாங்கப் பார்ப்பான் வந்து புத்தாடைபெற்று நிகழ்த்துஞ் சடங்கைத் தொல்காப்பியர் குறித்திலர் என்பது கவனிக்கத் தக்கது.) இப்பண்டை மணமுறை, தொல்காப்பியர் காலத்துக்கு முன்னும், அவர் காலத்திலும், அவர் காலத்துக்கு மிகப் பிற்பட்ட அகநானூற்றுக் காலத்திலும் நடைமுறையில் இருந்ததென்பது அறியத் தக்கது. பார்ப்பானை வைத்து மணமுடிக்கும் இக்காலவழக்கம் மிகமிகப் பிற்பட்ட காலத்திலேதான் இந்நாட்டிற் புகுந்திருத்தல்வேண்டும்.

அகநானூற்றில் பண்டைத் தமிழர் மணமுறையைச் செவ்விதாகக் கூறும் செய்யுள் இரண்டு உண்டு. அவற்றுள் முதலது பின் வருவது: "உணவுக் குவியல் கிடந்தது. பந்தற்கீழே புது மணல் பரப்பப்பட்டிருந்தது. வீட்டு விளக்குகள் சுடர்விட்டு ஒளிர்ந்தன. தலைவனும் தலைவியும் மாலைகளால் மாண்புறத்

திகழ்ந்தனர். அழகொழுகும் காலைநேரத்தில் நல்லோரையில் அழகிய பெண்கள் சிலர் தம் தலைமீது குடங்களை ஏந்தி நின்றனர்; சிலர் புதிய அகன்ற பாத்திரங்களை ஏந்தி நின்றனர்; அழகிய முதிய பெண்கள் பேச்சொலியோடு அப்பெண்கள் ஏந்தியிருந்த நீர்ப்பாத்திரங்களை வாங்கி ஒவ்வொன்றாகத் தர, பிள்ளைபெற்ற மகளிர் நால்வர்கூடித் தலைவியை, நோக்கி 'கற்பில் வழாது நல்லன செய்து உன் தலைவன் நலத்தைப் பேணுவாயாகுக' என்று கூறி, அரிசியும் அலரியும் கலந்த நீரால் நீராட்டினர். (இங்ஙனம் நீராட்டம் முடிந்த பின்னர், யாவரும் உண்டு மகிழ்ந்தனர்). அந்த இரவே பெருமனைக் கிழத்தியர் கூடித் தலைவியை அலங்கரித்து 'பேரில் கிழத்தி யாகுக' (பெரிய வீட்டுக்குரியாள் ஆகுக) என்று கூறிச் சதுர்த்தியறைக்குள் புக விட்டனர்."

" * * *

உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புகல்வற் பயந்த திறலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
'கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆகெ'ன
நீரொடு சொரிந்த விரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
'பேரில் கிழத்தி ஆகெ'னத் தமர்தர,
ஓரில் கூடிய உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்
தொடுங்கினள்".

இச் செய்யுளின் அடியில் 'இதனுள் வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்தவாறும், தமர் தந்தவாறும் காண்க' என்று நச்சினார்க்கினியர் கூறுதல் கவனிக்கத் தக்கது. இதனால், 'கரணம்' எனத் தொல்காப்பியர் குறித்தது இன்னது என்பது தெளிவு.

அகநானூற்று 136-ம் செய்யுளும் இத்தகைய பண்டைத் தமிழ் மண முறையை விரிப்பதேயாகும். அதன் சுருக்கம் வருமாறு: "வெண்சோறு நெய்யிட்டு பெரியோர்க்கு வழங்கப் பட்டது. புள் நலம் நன்றாக இருந்தது. வானம் ஒளிர்ந்தது. மணவீடு செவ்வனே அலங்கரிக்கப்பட்டிருந்து. மணவீட்டார் கடவுளை வணங்கினர். பல் இயங்கள் ஒலித்தன. மணப்பெண் நீராடி ஆடையணிகளால் அழகுறத்திகழ்ந்தாள்; அவளைப் பெண்டிர் பலர் இமை கொட்டாது பார்த்து நின்றனர். மண மக்கள் வழிபடப் பாவை ஒன்றை அலங்கரித்துப் பந்தரில் வைத்தனர். மணமங்கை புதுமணல் பரப்பப்பெற்ற பந்தலின் கீழே அமர்ந்திருந்தாள். அப்போது (பாவை வழிபாடு நடந்த பின்னர்) கொடுப்போர் கொடுப்பக்கோடற்குரியோர் பெண்ணைப் பெற்றனர்." இதனைக் குறிக்கும் செய்யுள் தருவது மிகை யாதலின், விடப்பட்டது.

இப் பண்டைக்கால மணமுறையைப் பற்றிக் குறிக்கு மிடத்துக் காலஞ் சென்ற திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள், "**இத்தகைய பண்டைத் தமிழ் மண முறையில் ஆரியக் கலப்புடையது ஒன்று மில்லை; எரி வளர்த்தல் இல்லை; தீவலம் வருதல் இல்லை' 'தட்சணை' பெறப் புரோகிதன் இல்லை; இது முற்றிலும் தமிழர்க்கே உரிய மண முறை**" என்று 'தமிழர் சரித் திரம்' என்னும் தமது ஆங்கில நூலில் (பக். 80) கூறியிருத்தல் கவனிக்கத் தக்கது.

"பண்டைத் தமிழர் களவு மணம் மிகவும் பழமையானதும் சிறந்ததுமாகும். நீடித்த வாழ்க்கை ஒப்பந்தத்துக்கு மிகவும் இயற்கையா யமைந்த சாதனமாகும். அதில் வீரம், தாமே வாழ்க்கைக்குறியாரைத் தேர்ந்தெடுத்தல், வாக்குறுதியை நிறை வேற்றல், மதம் யாவும் ஒன்றுபட்டு ஒளிர்கின்றன. ஒருவரை ஒருவர் தாமே தேர்ந்து பழகுதல் களவில் சிறிது காலம் இருக்க வழியாகின்றது. ஆனால் அது விரைவில், அவரவர் பெற்றோர் விருப்பத்தின்மீது மகிழ்ச்சிக்குரிய மண வாழ்க்கையாக மாறு கின்றது" என்று பேராசிரியர் ஆர். அரங்காச்சாரியார் அவர்கள்

(பிரஸிடென்ஜி காலேஜ்) தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் கூறி யிருத்தலும் கவனிக்கத் தக்கது.

இனி, 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப,

என்னும் கற்பியல் சூத்திரத்துக்கு உதாரணமாக நச்சினார்க் கினியர், நாம் முன்னர்க்கூறிய அகநானூற்று 136-ம் செய்யுளைக் காட்டியுள்ளார். எனவே, 'நாம் முன்னர்க் கூறியாங்கு, அங்கி யங்கடவுள் அற்ற-புரோகிதன் அற்ற-அம்மி முதலியன அற்ற-மணமே, 'கரணமொடு புணர்ந்த மணம்—தொல்காப்பியர் கூறிய மணம்' என்பது நன்கு உணரத்தக்கது. இதுகாலை நாம் செய் வன பண்டைத் தமிழர்வழி வந்த மணமன்று என்பதையும் நன் கறிதல் நனி சிறந்தது. இது நிற்க.

இங்ஙனம் நடுநிலைமையும் பகுத்தறிவும் உடையோரால் பாராட்டப்பெற்ற இப்பண்டைக் களவு மணம், மிகத் தூய்மை வாய்ந்தது என்பது,

"பிரிவின்றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயிர் அம்மே" அகநானூறு, 12.

என்னும் அடிகளாலும்,

"யாக்கைக்(கு), உயிரியைந் தன்ன நட்பின், அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே"
—அகநானூறு, 339.

என்னும் அடிகளாலும், நன்கறியத்தக்கது.

இத்துணைப் பேரன்புடைய காதலர் இருவருள் தலைவி, களவினுமாதல் கற்பினுமாதல் தன்வேட்கையைத் தானே உணர்த் தல் இல்லை என்பதும் அறியத் தக்கதே. மணந்த திருவளர் நங்கை ஒருத்தி தன் முன்கையில் கிள்ளையை ஏந்தி அதனை நோக்கி, "பிரிந்து சென்ற தலைவர் இன்று வருவரோ, கூறு என்று கேட்கத் தொடங்கினவள், இல்லத்தில் இருந்தோர்க் கஞ்சி, மெல்லப் பேசினள்" என்பதிலிருந்து அக்காலத் தமிழ்ப்

பெண்களின் நாணுடைமையும் அடக்கமுடைமையும் இனிது விளங்கும்:

"செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
'இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தெ'ன,
இல்லவர் அறிதல் அஞ்சி, மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை." —அகநானூறு, 34.

இதனையே தொல்காப்பியனார், 'தன் உடம்பும் உயிரும் தேய்ந்து புணர்ச்சியின்றி இருந்த காலத்தும் இவை என்ன வருத்தமுற்றனகொல் என்று தனக்கு வருத்தம் இல்லாததுபோலக் கூறுவதல்லது தலைவி தானே தலைவனைச் சேர்தல் இருவகைக் கைகோளினும் இல்லை' என அறுதியிட்டுக் கூறலானார்:

"உடம்பும் உயிரும் வாடியக் காலும்
'என்னுற் றனசொல் இவை'எனின் அல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை."
—தொல். பொருளியல், சூ. 9.

இன்னணம், கலந்த பொழுதிருந்து களவு கற்பின் வழிநடந்த காதலர்,

"அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பு நெகிழ்க்குங் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கையொ டோராங்கு முயங்கி"
—அகம், 225.

இல்லறப் பேரின்பம் பெரிதும் துய்த்தனர் என்பது அப் பண்டைக் காலப் பனுவல்களால் அறியப்படும் இன்பச் செய்தியாம்.

பாண்டியர் வரலாறு

திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள்
தமிழ்ப்பண்டிதர் வாணுதுறை ஹைஸ்கூல் கும்பகோணம்

(முற்றொடர்ச்சி துணர் 11, மலர் 12, பக்கம் 473)

IX

தென்பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த பிற்காலப் பாண்டியர்கள்.

கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதிமுதல் பதினேழாம், நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் தென்பாண்டி நாட்டில் சில பாண்டிய அரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் அன்னோர் பெயர்களை யுணர்த்துமளவிலுள்ளனவேயன்றி வரலாற்றுண்மைகளை விளக்கக்கூடியனவாக இல்லை. அவர்கள் தலைநகர் யாது என்பதும் நன்கு தெரியவில்லை. ஆயினும், கொற்கை, தென்காசி, கரிவலம் வந்தநல்லூர் ஆகிய ஊர்கள் அவர்கள் தலைநகரங்களாக இருந்திருத்தல் வேண்டும் என்பது உய்த்துணரப்படுகின்றது.

பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தென்பாண்டி நாட்டில் அரசு செலுத்திய பாண்டியர்களுள், பராக்கிரம பாண்டியன் என்ற பெயருடையார் மூவர் இருந்தனர்[1]. அம்மூவருள் கி.பி. 1387 ல் திருக்குற்றாலத்தில் திருப்பணி புரிந்தவன் ஒருவன்; கி. பி. 1384 முதல் 1415 வரையில் அரசாண்டவன் மற்றொருவன்; கி. பி. 1401 முதல் 1434 வரையில் ஆட்சி புரிந்தவன் மற்றையோன். அன்றியும், அக்காலப் பகுதியில் சடையவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன் விக்கிரம பாண்டியன், என்ற வேறிரண்டு மன்னரும் இருந்தமை அறியத்தக்கது. இவர்களுள் குலசேகர பாண்டியன் கி. பி. 1395 ல் பட்டம் பெற்றவன். இவன் கல்வெட்டொன்று கரிவலம்வந்தநல்லூரில் உள்ளது. அஃது இவ்வேந்தனது ஆணைத்திருமுகமாகும்[2]. விக்கிரமபாண்டியன் கி.பி. 1401 முதல் 1422 வரையில் அரசுசெலுத்தியவன்.

---

1. The Pandyan Kingdom pages 246 and 248.
2. Travancore Archaeological Series Vol. I page 45

இவன் கல்வெட்டுக்கள் திருக்குற்றாலத்திலும் திருப்புத்தூரிலும் உள்ளன[1]. இவர்கள் எல்லோரும் தென்பாண்டி நாட்டில் எவ்வெவ்விடங்களிலிருந்து எவ்வெப் பகுதிகளை ஆட்சி புரிந்தனர் என்பது புலப்படவில்லை.

சடையவர்மன் பராக்கிரம பாண்டியன்:—பிற்காலப் பாண்டியர்களுள் இவ்வேந்தன் மிகுந்த பெருமை வாய்ந்தவன் ஆவன். இவன் கி. பி. 1422 முதல் 1463 வரையில் அரசாண்டவன்; செந்தமிழ்ப் புலமையும் வடமொழிப் பயிற்சியும் உடையவன். இவனைப் பொன்னின் பெருமாள்[2] எனவும் மானகவசன்[3] எனவும் அந்நாளில் வழங்கியுள்ளனர். தென்காசிக் கோயிலிலுள்ள 'பூமிசைவனிதை நாவினிற் பொலிய' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி[4] இவனது போர்ச் செயல்களையும் திருப்பணிகளையும் குணச்சிறப்பையும் நன்கு விளக்குகின்றது.

இம்மன்னன், சங்கர நயினார்கோயில், திருக்குற்றாலம், முதலைக்குளம், வீரகேரளம் புதூர் முதலான ஊர்களில் தன்பகைஞரைப் போரில் வென்று புகழெய்தினான் என்று இவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது. இவன் திருக்குற்றாலப்போரில் சேரனை வென்றான் என்பது தளவாய் அக்கிரகாரச் செப்பேடுகளால் வெளியாகின்றது.[5]

இவன் விந்தனூர்[6] முதலான ஐந்தூர்களில் அகரங்கள் அமைத்து அந்தணர்களுக்கு அளித்தமையும், திருக்குற்றாலம் திருபுடை மருதூர் இவற்றிலுள்ள சிவாலயங்களில் மண்டபங்கள் அமைத்தமையும், திருநெல்வேலியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு அர்த்தயாம வழிபாட்டிற்கு நிபந்தங்கள் விட்டமையும் இவன் மெய்க்கீர்த்தியால் அறியப்படுஞ்செய்திகளாம்.

---

1. The Pandyan Kingdom page 248.
2. Travancore Archaeological Series Vol. I page 97.
3. Do Do
4. Do Do page 91.
5. Do Do pages 126 & 133
6. செங்கோட்டை தாலூகாவிலுள்ள இவ்விந்தனூர்க்குப் பராக்கிரம பாண்டியச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும் முற்காலத்தில் இருந்தமை உணரத்தக்கது.

இற்றை நாளிலும் காண்போர் கண்களைக் கவரும் சிற்ப நுட்பமும் வனப்பும் வாய்ந்த தென்காசிப் பெருங்கோயிலை இவ்வேந்தன் எடுப்பித்தது இவனது சிவபத்தியின் மாண்பினை இனிது புலப்படுத்தா நிற்கும். இவ்வாலயத்திற்கு நாள் வழி பாட்டிற்கும் ஆண்டு விழாவிற்கும் தேவதான இறையிலியாகப் பல ஊர்கள் இவ்வரசனால் அளிக்கப்பெற்றுள்ளன[1]. சிவபெருமான், ஒரு நாள் இவ்வரசன் கனவில் தோன்றி வடகாசியிலுள்ள தம் திருக்கோயில் அழிவுற்ற நிலையிலிருத்தல் பற்றிச் சித்திரா நதியின் வடகரையில் தென்காசியும் அதில் ஓர் ஆலயமும் அமைக்குமாறு கூறியருளியதே, இதனை இவன் கட்டுவித்தமைக்குக் காரணமாகும். இச்செய்தி, தென்காசிக்கோயிற் கோபுரத்தின் முன்னர் நிற்கும் ஒரு கற்றூணில் வரையப்பெற்றுள்ளது[2] இக்கோயிலின் திருப்பணி முடிவுபெறுதற்குப் பதினேழாண்டுகள் ஆயின என்பது அக்கல்வெட்டால் தெரிகிறது. ஆனால், இவன் தொடங்கிய ஒன்பது நிலைக்கோபுரத் திருப்பணிமாத்திரம் இவன் ஆட்சியில் முடிவெய்தவில்லை. இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்பால் இவன் கொண்டிருந்த பத்தி அளவிட்டுரைக்கத் தக்கதன்று. எத்தகைய குறைகளுமின்றி இக்கோயிலைப் பாதுகாத்துவருமாறு சிவனடியார்களையும் தன்வழித் தோன்றல்களையும் இம்மன்னன் வேண்டிக்கொண்டிருப்பது குறிப்பிடற்பாலதாகும். அவ்வேண்டுகோளும் சில செந்தமிழ்ப் பாடல்களாக உள்ளது. கன்னெஞ்சமுடையாரையும் உருக்கும் இயல்புடையனவும், எந்நிலையினரையும் பிணிக்குந் தன்மை வாய்ந்தனவும் ஆகிய அப்பாடல்கள் இவ்வரசன் இயற்றியனவே யாகும். அவற்றைத் தென்காசிக்கோயிற் கோபுரத்தில் இன்றும் காணலாம்[3]. இப்பெருங் கோயிலிற் பிற்காலப் பாண்டியர்கள்

1. Travancore Archaeological Series Vol. I p. 91, 92, 93, & 101
2. Travancore Archaeologieal Series Vol. I pages 99 and 100
3. (1) 'மனத்தால் வகுக்கவு மெட்டாத கோயில் வகுக்கமுன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன்றென் காசியை யென்றுமண்
நினைத்தா தாஞ்செய்து தங்காவல்பூண்ட நிருபர்பதந் [மேல்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதி யானுந் தரித்தனனே'.

எல்லோருக்கும் முடிசூட்டுவிழா நடைபெற்று வந்தமை உணரற் பாலதாகும்.

இவன், தன்னுட்சியில் விசுவநாதப்பேரேரி என்ற பெயருடைய ஏரி ஒன்று வெட்டுவித்திருப்பது குடிகளது நலத்தின் பொருட்டு இவன் புரிந்த அரிய செயல்களுள் ஒன்றாகும்[1]. சிவ பத்தியிலும் செங்கோன் முறையிலும் சிறந்து விளங்கிய இவ் வேந்தன் கி. பி. 1463 ல் விண்ணுலகடைந்தான்[2].

சடையவர்மன் குலசேகர பாண்டியன்:—பராக்கிரம பாண்டியன் தம்பியாகிய இவ்வரசன் கி. பி. 1429 முதல் 1473 வரையில் ஆட்சிபுரிந்தவன். எனவே, இவன் தன் தமையனுடன் சேர்ந்து தென்பாண்டி நாட்டை அரசாண்டவனுதல் வேண்டும். பராக்கிரம பாண்டியன்காலத்தில் தொடங்கப்பெற்று முடிவு பெருமவி

---

(2) 'ஆராயினு மிந்தத் தென்காசி மேவும் பொன் னூலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப் புரப்பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே'.

(3) 'சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்ன
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்ரம பாண்டியனே'.

(4) 'சாத்திரம் பார்த்திங் கியான்கண்ட பூசைகள் தாம்நடத்தி
யேத்தியன் பால்விசுவ நாதன்பொற் கோயிலென்றும் புரக்க
பார்த்திபன் கொற்கைப் பராக்ரம மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கு மடைக்கலங் கூறினனே'.

Travancore Archaeological Series Vol. I p 96 & 97.

1. 'நாம் நவமாகக் கண்ட விசுவநாதப்பேரேரி' Do. Do. page 51.

2. இவ்வேந்தன் இறந்தஞான்று ஒருபுலவர் பாடியுள்ள பாடலை அறிக.
'கோதற்ற பத்தியலுபத்து மூவர்தம் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத்தோ செம்பொ னம்பலத்தோ
வேதத்திலோசிவ லோகத்திலோவிசுவ நாதனிரு
பாதத்திலோ சென்று புக்கான் பராக்ரம பாண்டியனே.'

Travancore Archaeological Series Vol. I page 97.

ருந்த ஒன்பது நிலைக்கோபுரத் திருப்பணியை இவன் முடித்தமை அறிதற்குரியதாகும்[1].

அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன்:—இவன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் புதல்வன்; கி. பி. 1473 முதல் 1506 வரையில் அரசு செலுத்தியவன். இவன் காலத்தில் பராக்கிரம பாண்டியனான குலசேகர தேவன் என்ற வேறொரு மன்னன் இருந்தனன் என்பது சில கல்வெட்டுக்களாற் புலப்படுகின்றது[2]. அவன் கல்வெட்டுக்கள் கி. பி. 1479 முதல் 1499 வரையில் உள்ளன. அவன் யாவன் என்பது தெரியவில்லை.

இனி, **அபிராம பராக்கிரம பாண்டியன், ஆகவராமன்** என்ற உடன்பிறப்பினர் இருவர் இருந்தமை புதுக்கோட்டைச் செப்பேடுகளால் அறியப்படுகின்றது[3]. இவர்களைப்பற்றிய செய்திகள் கிடைத்தில.

சடையவர்மன் சீவல்லப பாண்டியன்:—இவன் ஆகவராமன் புதல்வன்; கி. பி. 1534 முதல் 1543 வரையில் அரசாண்டவன். இவனுக்கு 'இறந்தகாலமெடுத்தவன்'[4] 'பாண்டியராச்சியதாபனாசாரியன்'[5] என்ற பட்டங்களும் உண்டு. இவன் காலத்தில் திருவாங்கூர் இராச்சியத்திலிருந்த உதயமார்த்தாண்டவர்மன் என்ற சேரமன்னன் ஒருவன், தென்பாண்டி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். அச்சேரன் கல்வெட்டுகள் பிரமதேசம், சேரமாதேவி, அம்பாசமுத்திரம், களக்காடு ஆகிய ஊர்களில் உள்ளன.[6] ஆகவே, இப்பகுதி அவனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பது திண்ணம். தன்னாட்டை இழந்த சீவல்லப பாண்டியன், விசயநகர வேந்தனாகிய அச்சுத தேவராயனிடம்

1. Travancore Archaeological Series Vol. I page 103
2. Do Do 60
3. Do Do 83
4. Do Do 47
5. Do Do 54
6. Do Do 55

முறையிடவே, அவனும் பெரும் படையோடு தென்னாட்டிற்கு வந்து உதயமார்த்தாண்டவர்மனைப் போரில் வென்று அவன் கைப்பற்றியிருந்த தென்பாண்டி நாட்டைப் பிடுங்கிப் பாண்டியற்குக் கொடுத்தனன்[1]. விசயநகர வேந்தன் இங்ஙனம் விரைந்து செய்தமைக்கு மற்றொரு காரணமும் உண்டு. அது சேரமன்னன் சில ஆண்டுகள் அவனுக்குக் கப்பஞ் செலுத்தாதிருந்தமையேயாம்.

அச்சுததேவராயன் இத்தகைய அரிய உதவி புரிந்தமை பற்றிச் சீவல்லபன் தன்மகளை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்து மகிழ்ச்சியுற்றான்[2]. இந்நிகழ்ச்சியினால் பாண்டியர் குலத்திற்குப் பழைய பெருமையும் சிறப்பும் மீண்டும் உண்டாகுமாறு தான் செய்துவிட்டதாக எண்ணி 'இறந்தகாலமெடுத்தவன்' 'பாண்டியராச்சியதாபனாசாரியன்' என்ற பட்டங்களை இவன் புனைந்து கொண்டனன்போலும்.

சடையவர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியன்:—இவன் அபிராம பராக்கிரம பாண்டியனுடைய முதற் புதல்வன். இவனுடைய கல்வெட்டுக்கள் கி. பி. 1543 முதல் 1552 வரையில் உள்ளன. இவனைப்பற்றி யாதும் தெரியவில்லை.

நெல்வேலிமாறன்:—இவன் அபிராம பராக்கிரம பாண்டியனுடைய இரண்டாவது புதல்வன்; கி. பி. 1552 முதல் 1564 வரையில் ஆட்சிபுரிந்தவன். இவனுக்கு வீரபாண்டியன், குலசேகர பாண்டியன், பொன்னின் பாண்டியன், தர்மப் பெருமாள், அழகன் பெருமாள் என்ற வேறு பெயர்களும் உண்டு. இவன் புலவர்கள் பாடிய வீரவெண்பாமாலை கொண்டவன் என்று தென்காசியிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது[3].

சடையவர்மன் அதிவீரராம பாண்டியன் இவன் நெல்வேலி மாறன் முதல்மகன்; கி. பி. 1564 முதல் 1604 வரையில் அரசு

---

1. Travancore Archaological Series Vol. I Page 55
2. Do Do 56
3. Do Do Ins. No. VII

செலுத்தியவன். இவனை அழகன் சீவலவேள் எனவும் வழங்குவர். தன் தந்தையாகிய நெல்வேலிமாறனை நினைவு கூர்தற் பொருட்டுத் தென்காசியில் குலசேகரமுடையார் ஆலயம் ஒன்றை இவன் எடுப்பித்திருப்பது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்[1]. இதன் அண்மையில் இவன் எடுப்பித்த விண்ணகரம் ஒன்றும் உளது. இவன் செந்தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்கியவன் என்பது இவன் பாடியுள்ள சில தமிழ் நூல்களாற் புலப்படுகின்றது.

வடமொழியில் ஹர்ஷன் இயற்றியுள்ள நைஷதம் என்ற நூலை இவன் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளான். அது நைடதம் என்று வழங்கப்படுகிறது. அந்நூலை மொழிபெயர்த்தற்கு இவனுக்கு உதவி புரிந்தவர் நைஷதம் இராமகிருஷ்ணர் என்ற வடமொழிப்புலவர் ஆவர்[2]. இவன் பாடியுள்ள பிறநூல்கள் கூர்மபுராணம், வாயு சங்கிதை, காசிகாண்டம், இலிங்கப் புராணம், நறுந்தொகை என்பன. இவன் சிவபெருமானிடத்தில் மிகுந்த ஈடுபாடுடையவனாக ஒழுகி வந்தனன் என்பது இவன் இயற்றியுள்ள சைவபுராணங்களால் நன்கு விளங்கும்.

வரதுங்க ராமபாண்டியன்:—இவன் பராக்கிரம குலசேகர பாண்டியனுடைய இரண்டாவதுமகன்; கி. பி. 1588ல் முடிசூட்டப் பெற்றவன். அபிராம சுந்தரேசுவரன் எனவும் வீரபாண்டியன் எனவும் செப்பேடுகளில் இவன் குறிக்கப் பெற்றிருத்தல் அறியத்தக்கது[3]. அதிவீரராம பாண்டியன் ஆட்சிக்காலத்தில் தென்பாண்டி நாட்டிற் சில பகுதிகளைக் கரிவலம்வந்தநல்லூரிலிருந்து இவன் அரசாண்டவனாதல் வேண்டும் என்பது சிலகுறிப்புக்களால் அறியப்படுகின்றது[4]. இவன் வில்லவனை வென்றான் என்றும் வல்லமெறிந்தானென்றும் தென்காசியிலுள்ள ஒரு கல்

---

1. Travancore Archaeological Series Vol. I page 50
2. Do Do page 85
3. Do Do pages 115 & 133
4. Do Do page 125

வெட்டு உணர்த்துகின்றது[1]. இவனால் வென்றடக்கப் பெற்ற சேரமன்னன் யாவன் என்பதும் வல்லத்தில் இவன் யாருடன் போர்புரிந்தான் என்பதும் புலப்படவில்லை.

அதிவீரராமபாண்டியனைப்போல் இவ்வேந்தனும் தமிழ் மொழியில் பெரும்புலமைபடைத்தவன் என்பது இவன் இயற்றி யுள்ள தமிழ்நூல்களால் நன்கு துணியப்படும். அவை பிரமோத் தரகாண்டம், கருவைக் கலித்துறையந்தாதி, கருவைப் பதிற் றுப் பத்தந்தாதி, கருவை வெண்பா அந்தாதி என்பன. இவ் வந்தாதிகள் அதிவீரராமபாண்டியன் பாடியவை என்றுஞ் சிலர் கூறுவர். அது தவறாகும்.

இம்மன்னனும் சிவபெருமானிடத்து ஒப்பற்றபத்தியுடைய வனாயிருந்தனன், என்பது இவன் இயற்றியுள்ள நூல்களால் இனிது புலனாகும். அதிவீரராமபாண்டியற்குச் சுவாமிதேவரும் வரதுங்கராம பாண்டியற்கு வேம்பற்றூர் ஈசானமுனிவரும் ஞானாசிரியர்களாக இருந்திருத்தல் வேண்டும் என்பது இவர்கள் தம் நூல்களிற் கூறியுள்ள குருவணக்கங்களாற் பெறப்படுகின் றது.

(தொடரும்)

---

1. 'பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயர்க்குமறங் கூறுமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.'

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தென்காசியில் வாழ்ந்த கலியன் கவிராயர் என்பவர் வரதுங்கராம பாண்டியன் முடிசூட்டு விழாவில் நாண்மங்கலமும் குடைமங்கலமும் வாண்மங்கலமும் பாடி அரசனைப் பாராட்டியுள்ளனர். அவற்றுள், இப்பாடல் வாண்மங்கலமாகும் ('கல்வெட்டுக்களால் அறியப் படும சில தமிழ்ப் புலவர்கள்' என்ற என் கட்டுரையில் இவற்றைக் காண லாம். தமிழ்ப் பொழில் துணர் 5-பக்கங்கள் 379-385).

திருவாதவூரர் திருவாய்மொழி

வித்துவான். வீ. குமாரசாமிஐயர், தமிழாசிரியர், உயர்தரப்பள்ளி, மேலூர்

நூல்கள் அறம் பொருள் இன்பம் வீடென்னும் பொருள் பற்றிக் கூறுந்திறத்தால் நால்வகைப்படும். அவற்றுள், அறம் பொருள் இன்பமென்னும் மும்முதற் பொருள்பற்றிக் கூறும் நூல்கள் உலகமக்கள் இம்மையில் நல்வாழ் வுறுதற் கேதுவா யிருத்தலான் அவற்றை உலகநூலென்றும், தோற்றமுடை யனயாவும் நிலையுதலிலவாந் தன்மையறிந்து, செல்வத்தின் கண்ணும் யாக்கையின் கண்ணுமுள்ள பற்றினைவிட்டு, இறைவனேதிய வீட்டு நெறியே நன்னெறியென மனத்துட் கொண்டு, "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ், செம்பொருள் காண்பதறிவு." என்னும் மெய்புணர்வுபெற்று வீடுறுதற் கேதுவாயிருத்தலான் வீட்டுநூலை அறிவனூல் என்றுமுரைத்தல் பொருந்தும்.

"வீடென்பது சிந்தையு மொழியுஞ்செல்லா நிலைமைத்தாக வின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக் கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்." (திருக்குறள்-உரைப்பாயிரம்) என்று ஆசிரியர் பரிமேலழகரும், "அகத்தியனாரும் தொல் காப்பிய னாரும் வீடுபேற்றிற்கு நிமித்தங்கூறுதலன்றி, வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறுரென்று உணர்க. அஃது 'அந்நிலை மருங் கின்.......என்பதனான் உணர்க. இக்கருத்தானே வள்ளுவ நாய னாரும் முப்பாலாகக்கூறி மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினார்." (தொல்—சிறப்புப்பாயிரம்.) என்று ஆசிரியர் நச்சினார்க்கினியரும் உரைப்பர். பின்னர், "அந்நிலை மருங்கி னறமுத லாகிய, மும்முதற் பொருட்டு முரியவென்ப." என்னுஞ் சூத்திரவுரையுள், "வீடென்பது செய்யுளுள் வாராதோவெனின் அறமுதலென்பது புறப்பாட்டெல்லையாகக் கூறினானென்பார் நான்கு பொருளுந் தழீஇ யுரைப்ப. இனி யொரு சாரார் மும்முதற்பொருட்கு முரிய வென்பதனை எச்சப்

படுத்திக் கொள்ப. அற்றன்று, உலகியற்பொருண் மூன்றனையுங் கூறுவான் அவற்றை மும்முதற் பொருளென்றான்; அவையின்றி வீடு பெறு மாறு வேறின்மையின் வீடும் ஆண்டுக் கூறினா னென்பது. அல்லாதார் வீடென்னும் பொருண்மை செய்யுட் கண் வாராமையின் அது கூறானென்ப. அங்ஙனங் கருதின் அறமுதற்பொருளுஞ் செய்யுட் கண் வாராவென மறுக்க." எனப்பேராசிரியரும், "மும்முதற் பொருளெனவே, அவற்றது துணைப் பொருளாகிய அறநிலையின்மையும் பொருணிலையின் மையும் இன்பநிலையின்மையும் அடங்குமென்ப. உலகியற் பொருண் மூன்றனையும் இவையெனக் கூறி அவற்றை விடுமாறுங் கூறவே, வீடுங் கூறிற்றாம்." எனநச்சினார்க்கினியரும் உரைப்பர்.

இவ்வுரை யாசிரியர்தங் கூற்றையாராயின் செய்யுட்கண் வீட்டின்றன்மையினையும், வீடுற்றாருறு மின்ப நிலையினையும் இற் றெனவுணர்த்த லரிதென்ப தூஉம், மும்முதற் பொருள்பற்றிக் கூறும்நூல்கள் உளவாதல்போல் வீடென்னும் பொருள்பற் றிக்கூறும் நூல்களும் உளவென்பதூஉம் பெறப்படுகின்றன.

அன்றியும், தமிழ் மொழியில் 'தனக்குத் துணையில்லாத வீட்டின்ப மேதுவாக அறம் பொருள் இன்பமாகிய பொருட் பகுதியானும் அவற்றுப் பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையும் முதலியவற்றானும் நிலைபேறில்லாத உலகியற்கை பொருந்திய நன்னெறியை' யுணர்த்தும் காஞ் சித்திணைக்கும், அத்திணையுள் அப்பொருளை விரிக்கும் துறை களுக்கும் இலக்கண இலக்கியங்களுள வாதலானும், "நாற் பொருள் பயக்கு நடை நெறித்தாதல்." பெருங்காப்பிய விலக் கணத்து ளொன்றாதலானும், சிவஞானசித்தியார் சிவஞான போதம் திருவாசகம் திருக்கோவையார் தேவாரம் மணிமேகலை முதலிய வீட்டு நூல்கள் இன்றுமுளவாதலானும் தமிழ்மொழி யில் மும்முதற் பொருள்பற்றிக் கூறும் நூல்களேயன்றி வீடென் னும் பொருள்பற்றிக் கூறும் அறிவனூல்களு முளவாதல் திண்ணம்.

ஆதலின், திருவாதவூரடிகளருளிய திருவாசகம், திருக்கோவையாரென்னும் அருந்தமிழ்ப் பனுவல்கள் அறிவனூலாதலை நோக்குவாம்.

திருவள்ளுவர் வீடுபேற்றிற் கேதுவாய துறவற நிலையை மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்னும் பொருளீருகப் பதின்மூன்றதிகாரங்களிற் கூறியதையொட்டி யதன் மேலெஞ்சிய பொருளை அடிகள் மெய்யுணர்தல் முதலாகக்கொண்டு அருளுவதாலும், நூலகத்துள், "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு." "வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும் பித்தவுலகு." "வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்வேண்டேன் மண்ணும் விண்ணும், வேண்டேன் பிறப்பிறப்புச் சிவம் வேண்டார்தமை நாளுந்தீண்டேன்." "பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும் மெய்யாக் கருதிக் கிடந்தேனை." "பேராசையாமிந்தப் பிண்டம்." "சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ்சிருகுடி விதுசிதையக் கூவாய்கோவே." எனப் பலவாறு உலகியலை நிலைபெற்ற வீட்டின்ப மெய்துதலைக் குறித்து வெறுத்தருளுவதாலும், "திருவடிக் கீழ்ச், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக் கீழ்ப், பல்லோருமேத்தப் பணிந்து." என்று நூற்பயன் மொழிவதாலும் திருவாசகத் திருமறை வீடுபற்றிக் கூறும் அறிவனூலே யாம்.

திருக்கோவையாரோவெனின், உலகியல் நோக்குவார்க்கு இன்ப நூலெனப் படுமாயினும், வீட்டின்பங் கருதினர்க்கு "ஆரணங்காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின், காரணங்காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப, ரேரணங் காணென்பரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர், சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே." என்றவாறு வீட்டு நூலாய் விளங்கலானும், உலகவின்பப் பொருளைப் பலவாறு இழித்துரைக்குமடிகள் அதனையே சிறப்பித்துக் கூறினரெனல் ஒவ்வாமையானும், இந்நூலுரையாசிரியர், "திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவர், ஐம்பொறி கையிகந்தறிவா யறியாச், செம்புலச் செல்வ ராயின ராதலின், அறிவனூற் பொருளுமுலகநூல்

வழக்குமென, இருபொருளூ நுதலி யெடுத்துக் கொண்டனர்.''
எனக் கூறலானும், உலகநூல் வழி நுதலிய வுரையுள்ளும் ஆங்
காங்கே உண்மைப் பொருளொளி வீசலானும் இஃதும் அறிவ
னூலேயாம்.

இந்நூல்கள் பிறர் கூற்றைக் கொண்டு கூறும் ஆசிரியர்தம்
நூல்கள் போலல்லாமல் உலகப்பற்றால் உயிருறுமின்னலையும்,
இறைவனருள் பெற்றஞான்று அஃதெய்து மின்பநிலையினையும்
தங்கூற்றினைக் கொண்டே உலகிற்கு விளக்க அருளப்பட்
டமையான் ஆசிரியருள்ளத்தை ஆடியினிழலெனச் செவ்விதி
னுணர்த்தும் இலங்கியச் சுவைசான்ற செய்யுள்களை யுடைய
னவாய் விளங்குகின்றன.

அவற்றுள் சில ஈண்டு நுகரப்படுவன.

உலகத்தில் மக்கள் தங் கண்ணிற்குப்புலனாகும் பொருள்கள்
பல. அவைகளைப் பற்றிய எண்ணங்கள் காண்போர் தம் உள்
ளறிவிற்குத்தக உதிக்கின்றன. ஒவ்வொருவருடைய உள்ளறிவும்
ஒத்திராமையின் காணும் பொருளைப் பற்றிய எண்ணங்களும்
ஒத்திருப்பதில்லை. இதனை ஓர் உவமை வாயிலாக அறிவாம்.

ஒரு பரந்த பசும்புற்றரையை ஒருழவன், ஓர்சிறுவன், ஓர்
துறவியாகிய மூவர் நோக்கினர். அவர்கள் முறையே அதனைத்
தனது ஓய்ந்த எருது மேய்தற்குரிய புலமாகுமென்றும், விளை
யாடுதற்கேற்ற களமாகுமென்றும், கல்லறை யமைத்தற்கேற்ற
இடமாகுமென்றுங் கருதிப் போந்தனர். ஈண்டு நோக்கப்பட்ட
பொருள் ஒன்று. நோக்கினோர் தம் உள்ளத்தெழுந்த எண்
ணங்கள் பலவாயின. இதனால் பொருள் புலப்பாடாதல் தத்தம்
உள்ளறிவைப் பொருத்ததென்பது புலனாம்.

அவ்வாறே நூலியற்றும் புலவன்றன் உள்ளறிவிற் கேற்ற
வாறே அவன் கூறும் இயற்கைப் பொருள் வர்ணனைகளும்
அமைந்திலங்கு வனவாம்.

நம்பெருமான் "தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோ
டும், பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ், சூலமுந்

தொக்க வளையுமுடைத் தொன்மைக், கோலமே" நோக்கும் பொருளெனக் கொண்ட உளத்தராதலின் உலக இயற்கைப் பொருள்களும் இறைவி இறைவர்தம் திருவுருவமாகவே அவர்தம் கட்புலனுக்குப் புலனுகலான் அவ்வாறு வர்ணித்தல் காணத்தக்கதாம்.

1. ஒரு பொய்கையை வர்ணிக்கும் அடிகள், அதன்கண் குவளைமலர்களும், நேமிப் புட்களும், செந்தாமரை மலர்களும், பாம்பினங்களு மிருத்தலான் அவைகள் முறையே உமையின் நீலத் திருமேனியினையும், நகிலினையும், சிவபெருமான்றன் செம்பவளத் திருமேனியினையும், அவனுக் கணியாயுள்ள பாம்பினங்களையுமொத்து விளங்கலானும், உடல் பாசகற்றுவார் படிந்திருத்தல் மனமாசகற்றும் அடியார் சார்ந்திருத்தலையு மொப்பதானும் அஃது எம்பிராட்டியையும் எங்கோனையு மொக்குமென்றருளிய,

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

(திருவெம்பாவை—13. செ.)

என்னும் இச்செய்யுள் உள்ளப்படாத திருவுருவை யுள்ளிய அடிகள் தம் உளச்சாயலாய் விளங்குகின்றதன்றே!

(தொடரும்.)

புத்தக மதிப்புரை

தனிப்பா மஞ்சரி:—இது வானமாமலை மடத்து வித்துவான் தென்திருப்பேரைத் திருவாளர் அனந்த கிருஷ்ணையங்கார் அவர்கள் இயற்றிய நூல். இவர் புகழ்மிக்க புலவர் மரபில் தோன்றியவர். இவர் கருவிலே திருவுடைய மதுரகவி என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவர் இயற்றிய பிரபந்தங்கள் பலவும் தமிழுலகில் பரவி அன்பர்களின் உள்ளத்தை இன்புறுத்தும் பெற்றியன. சிலேடை, யமகம், திரிபு, ஆசுகவி, சித்திரகவி ஆகிய சொல்லலங்காரப் பாக்களைப் பாடுவோர் இற்றை நாளில் இல்லையென எண்ணுவது தவறென இந்நூல் தெரிக்கிறது. சொல்லழகும், பொருட் பொலிவும், பாடலின் எளிமையும், நூலாசிரியரின் மதி நுட்பத்தையும், கவித்திறனையும் செவ்வே விளக்குகின்றன. இந்நூலைப்படிப்பவர் பண்டைக் காளமேகமே புத்துயிர்பெற்றுக் கவிமழையால் தமிழுலகை மகிழ்விக்க வந்தனரோவெனக் கருதுவர்.

தனிப்பாமஞ்சரி என்னும் இந்நூலை உருவாக்கி தமிழ் கூறு நல்லுலகிற்கு உதவிய பெருமை சீவைகுண்டம், வழக்கறிஞர் திருவாளர் S. T. பொன்னம்பல முதலியார் அவர்களுக்கே உரியதாகும்.

புலியூர்ப் புராணம்:—தெல்லிப்பழை வித்துவான் திருவாளர் சிவானந்தையர் அவர்கள் இயற்றியது. சூதசங்கிதை ஆதிய வடநூற் புராணங்களைத் தழுவி, தில்லையம்பலத்திலே கோயில் கொண்டிருக்கும் பெருமானார்மீது நூலாசிரியர் வைத்த பத்தியினால் உளங்கொண்டு பாடியது. ஆசிரியரது தமிழ்ப் புலமையும், சிவபத்தியும் சொன்னயம் பொருணயம் மிக்க பாடல்களால் நன்கு விளங்குகின்றது. நூல் முற்றுப்பெறுதற்குள் ஆசிரியர் காலமானது வருந்தத்தக்கது.

இந்நூலை ஆக்கித்தருமாறு ஆசிரியரவர்களை ஊக்கிய தெல்லிப்பழை வழக்கறிஞர் திருவாளர் க. தம்பையபிள்ளை அவர்கள், இதனைக் கணவரின் நினைவுமலராகப் பதிப்பித்து வெளியிடச்செய்த திரு. தம்பையபிள்ளையவர்களின் மனைவியார் பவளநாயகியார், ஆகிய இருவரின் தமிழ்த்தொண்டும் யாம் போற்றுதற்குரிய அருஞ்செயல்களாகும்.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய "வைகாசி" நன்கொடை

திங்கள் நன்கோடை ரூ. அ. ப.

திரு. சித்த வைத்திய சரபம் Dr. ஆ. சோதிபாண்டியன் (சித்திரை, வைகாசி)	அவர்கள்	10	0	0
,, க. நடராசன் B.A., B.L., (மாசி)	,,	5	0	0
,, ரே. அ. அனந்தவிசய முதலியார் (சித்திரை, வைகாசி)	,,	3	0	0
,, L. மார்க்கசகாயம்பிள்ளை B.A., (பங்குனி)	,,	1	8	0
,, இராச ரத்தனம்பிள்ளை B.E., Overseer (மாசி)	,,	1	0	0

ஆயுள் நன்கோடை.

,, பொன்னுசாமிநாடார் அவர்கள் (ரூபாய் ஆயிரத்துக்கு முதல் தவணை.)		50	0	0